**O.S.No.133/2021**

**PW 1:** செல்லம்மாள் தேதி 07.04.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு படிப்பறிவு இல்லை. சொத்து பத்திரங்களை நான் தான் எடுத்து கொடுத்தேன். இந்த வழக்கில் எத்தனை அயிட்டமாக காட்டியிருக்கிறேன் என்றால் 7 அயிட்டமாக காட்டியிருக்கிறேன். 6 மற்றும் 7 அயிட்ட சொத்துகள் எந்த ஊரில் உள்ளது என்றால் 6 ம் அயிட்டம் குறைக்காடு 7 ம் அயிட்டம் கன்னியாக்காடு. கூத்தம்பாளையம் கிராமத்தில் அச்சொத்துகள் உள்ளது. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் நானும் 1 ம் பிரதிவாதி செல்லப்பன் மட்டுமே. என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என் அப்பாவிற்கு நானும் 1 ம் பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. என் அப்பா மட்டும் தான். சேமலை மற்றும் சின்னான் ஆகியோர் யார் என்று தெரியாது. மாரப்பகவுண்டர் என் தந்தை. சின்னாகவுண்டர் யார் என்று தெரியாது. செல்லமுத்துகவுண்டர் என்னுடைய சகோதரர். சென்னியப்பகவுண்டர் சாமியப்பகவுண்டர் யார் என்று தெரியாது. நான் கொடுத்த ஆவணங்களில் மேற்படி சென்னியப்பகவுண்டர் சாமியப்பகவுண்டர் பெயர் உள்ளதில் அவர்கள் யார் என்றே தெரியாது என்று சொல்கிறேன். மேற்படி ஆவணங்களை நான் தான் வாங்கி வந்தேன். வி ஏ ஓ விடம் வாங்கினேன். மேற்படி சென்னியப்பகவுண்டர் சாமியப்பகவுண்டர் யார் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. தாவா சொத்துகள் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கும் ஆவணங்கள் என்ன என்றால் என்னால் சொல்ல இயலாது. ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டா சிட்டாவில் உள்ள கூட்டு பட்டாதாரர்களை யார் என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. என்

அப்பா இறந்து 80 – 85 வருடத்திற்கு மேல் ஆகிறது. என் அப்பா என்ன சொத்தை விட்டு சென்றார் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சொத்துகள் என் அப்பாவிற்கு வந்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருப்பூர் உள்ள சொத்துகள் 1 ம் பிரதிவாதி அவர் சுய சம்பாதியத்தின் வாங்கப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தில் என்ன வருமானம் வருகிறது என்றால் அது மானாவாரி பூமி. மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும். 1 ம் பிரதிவாதி விவசாயம் தான் தொழில். மழை வந்தால் விவசாயம் செய்வார். மாட்டு வண்டி ஓட்டி விறகு வியாபாரம் செய்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொத்தில் இருந்து எந்த வருமானமும் வரவில்லை என்றும் 1 ம் பிரதிவாதி மாட்டு வண்டி ஓட்டி விறகு வியாபாரம் செய்து வந்த வருமானத்தை கொண்டு திருப்பூரில் உள்ள சொத்துகளை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வருமானமும் இல்லை என்பதால் நாளது வரை அந்த சொத்தில் இருந்து எந்த வருமானமும் பெறவில்லை என்றால் சரியல்ல அச்சொத்தில் இருந்து வரும் வருமானத்தில் பாதி வருமானத்தை நானும் வாங்கினேன். வருடத்திற்கு எவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்றால் வருடத்திற்கு ரூ.50 வரும். என் தாத்தா சொத்துகளை பொறுத்து நாளது வரை பாகப்பிரிவினை ஆகாமல் உள்ளதா என்றால் என் அப்பாவிற்கு தான் பாகம் ஆகியுள்ளது. என் அப்பாவிற்கு எந்த வருடம் பாகம் ஆனது என்றால் 80 வருடத்திற்கு முன்பு பாகம் ஆனது. என் அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்துகள் என்ன என்ன என்றால் தாவா 1 முதல் 7 அயிட்ட சொத்துகளை தான் சொல்கிறேன். என் அப்பாவிற்கு பிரிந்த சொத்துகளில் வருவாய் துறை ஆவணங்களில் என் அப்பா பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் துறை ஆவணங்களை யாரிடமாவது காட்டி என் அப்பா பெயரில் உள்ளதா என்பதை காட்டி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. என் அப்பா பெயரில் ஆவணங்கள் இருப்பதாக

தெரியாமலேயே வழக்கை தாக்கல் செய்திருக்கிறீரா என்றால் இல்லை என் அப்பா பெயரில் ஆவணங்கள் இருப்பதால் தான் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து வருவாய் துறை ஆவணங்களிலும் என் அப்பா பெயர் இல்லை என்றும் இதர நபர்களின் பெயர்களே உள்ளது என்றும் வழக்கிற்காக மற்றவர்களின் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 23 வருடத்திற்கு முன்பே சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் தெரியும் அதற்கு முன்பு தெரியாது. எனக்கு சொத்தை பற்றி தெரியாது என்றும் அதனால் தான் அதனை குறித்து எனக்கு தெரியவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் தான் நான் குடியிருக்கிறேன். அதனால் சொத்தை எவ்வாறு பிரிவினை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. 23 வருடத்திற்கு முன்பாக பாகப்பிரிவினை ஆனதில் 1 ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்துகளை பொறுத்து அவர்களுடைய வாரிசுகளுடன் 2012 ல் பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியும் அவர்களுடைய வாரிசுகளும் செய்து கொண்ட பாகப்பிரிவினையை என் மகன் எடுத்து கொடுத்தாரா என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதிக்கும் அவர்களுடைய வாரிசுகளும் இடையே பாகப்பிரிவினை ஆகவில்லை. வாசாஆ 1 ஆவணம் 1 ம் பிரதிவாதிக்கும் அவர்களுடைய வாரிசுகளும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றும் அது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சாட்சி அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று கூறினார். என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துகளை 1 ம் பிரதிவாதிக்கு பாகம் பிரிந்ததில் அதனை பரிவர்த்தனை பத்திரம் மூலம் மாற்றி கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பரிவர்த்தனை மூலம் மாறி வந்த சொத்துகளை என்னுடைய மகன்கள் 2 வரும் சென்னி மற்றும் 3 ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியிடம் இருந்து 4 கிரையம் பத்திரங்கள் மூலம் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சொத்தில் வீடு கட்டடியிருக்கிறார். வீடு கட்டி 10 வருடம் ஆகிவிட்டது. வீடு கட்டும் போதே

அதில் எனக்கும் பங்கு உள்ள நிலையில் அதனை குறித்து பங்கு கோரி வழக்கு தாக்கல் செய்தீரா என்றால் இல்லை. எனக்கு சொத்தில் பங்கு இல்லை என்பதால் தான் என் தம்பி வீடு கட்டும் போது நான் அதனை குறித்து ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா சொத்தை 2003 ல் பாகம் பிரித்து விட்டார்கள் என்றும் அதனால் எனக்கு தாவா சொத்தில் எனக்கு பங்குரிமை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டும் என் தம்பி அவருடைய மகன்களுடன் பாகப்பிரிவினை செய்துகொண்டதில் நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் அப்போதே வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் தற்போது சொத்துகளின் மதிப்பு அதிகமாகி விட்டது என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் தாவாவில் 7 அயிட்ட சொத்துகளை காண்பிக்க வில்லை என்றும் 5 அயிட்டம் மட்டுமே காண்பித்திருக்கிறேன் என்றும் 5 ம் அயிட்ட சொத்தை பொறுத்து மட்டுமே நாளது வரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 5 ம் அயிட்டம் நாளது வரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதால் தான் மற்ற கூட்டுபங்குதாரர்களின் பெயர்கள் நான் தாக்கல் செய்துள்ள பட்டாகளில் கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சுயார்ஜித சொத்துகளில் எனக்கு பாகம் உள்ளதாக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.